2010 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 63, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

63—

பேருந்து வசதி

***69432—திருமதி பெ. கமலாம்பாள்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்திலிருந்து கோயம்புத்தூருக்கு புதிய பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரத்திலிருந்து கோயம்புத்தூர் செல்லும் பயணிகள் நகரப் பேருந்து வசதியை பயன்படுத்தி செங்கல்பட்டு வந்து கீழ்க்காணும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளைப் பயன்படுத்தி கோயம்புத்தூர் செல்ல ஏதுவாக உள்ளது: தடம் எண் 471, கல்பாக்கம்-கோயம்புத்தூர், செங்கல்பட்டு வழியாக 2 பேருந்துகளும், தடம் எண் 480, சென்னை-கோயம்புத்தூர், செங்கல்பட்டு வழியாக 18 பேருந்துகளும் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.*

திருமதி பெ. கமலாம்பாள்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

‘கேட்டதும் கொடுப்பவனே கிருஷ்ணா, கிருஷ்ணா,
கீதையின் நாயகனே, கிருஷ்ணா, கிருஷ்ணா’

அதுபோல மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காஞ்சிபுரம் வந்தபோது, குளிர்சாதனப் பேருந்துகளை இயக்க வேண்டுமென்று மேடையிலே கேட்டேன். அப்பொழுது மேடையிலேயே கமலாம்பாள் கோரிக்கை நிறைவேறும் என்று சொன்னார்கள். உடனே 4 நாட்களில் அந்தப்

பேருந்துகளை இயக்கினார். காஞ்சிபுரத்திலிருந்து தற்போது திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மதுரை, பெங்களூரு, திருப்பூர், திருப்பதி போன்ற தொலைதூரங்களுக்குச் செல்லும் பேருந்துகள் சாதாரண இருக்கை வசதிகளுடன் இயங்கிக்கொண்டிருக்கின்றன. தொலைதூரம் செல்லும் பயணிகளின் வசதிக்கேற்ப Delux வசதிகளுடன் பேருந்துகளை இயக்கவேண்டும். தற்போது கோடைக்காலமாக இருப்பதால், மக்களின் வசதிக்கேற்ப மேற்கூறிய பேருந்துகளைக் குளிர்சாதனப் பேருந்துகளாக இயக்கக் கேட்டுக்கொள்கிறேன். உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு கோவையிலே நடைபெறவிருப்பதால், நிரந்தரமாக கோவைக்குப் பேருந்தும், கூடுதலாக சிறப்புப் பேருந்துகளையும் இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 26 பேருந்துகள் சென்னையிலிருந்து கோயம்புத்தூர் செல்வதற்காக இருக்கின்றன. எனவேதான், அந்தப் பேருந்துகளை தற்போது பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்று நாங்கள் எடுத்துச் சொன்னோம். ஆனால், மாண்புமிகு அம்மையார் அவர்கள் எங்களுக்கு, கோவை செம்மொழி மாநாட்டையொட்டி நேரிடையாக குளிர்சாதனப் பேருந்து வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். விரைவில் அவருக்கு அந்தக் குளிர்சாதனப் பேருந்து வழங்கப்படும், நிச்சயமாக அவர் சொன்ன கோரிக்கை நிறைவேற்றி வைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

திருமதி பெ. கமலாம்பாள்: கேட்டதும் உடனே கொடுத்துவிட்டார். அதனால் நன்றியை இந்த அவையிலே கூறிக்கொள்கிறேன். காஞ்சிபுரம், பெரும்பாக்கம், விஷாரம் வழியாகவும், காஞ்சிபுரம், தாமல் வழியாகவும், காஞ்சிபுரம், கூரம், மதியூர், ஓக்கல்பட்டு வழியாக பனப்பாக்கம்வரையிலும், காஞ்சிபுரம், மாகரல், களக்காட்டூர், ஓரிக்கை வழியாக நகரப் பேருந்துகளைப் பள்ளி நேரங்களில் கூடுதலாக, பள்ளிப் பிள்ளைகள் செல்வதற்கு ஏற்ப வசதி செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். தற்போது செங்கல்பட்டு,

2010 ஏப்ரல் 20]

மதுராந்தகம் வழியாக காஞ்சிபுரம், மேல்மருவத்தூர் செல்வதற்கு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இதனால், பணம் மற்றும் காலநேரம் வீணாகிறது. ஆகவே, காஞ்சிபுரத்திலிருந்து உத்திரமேரூர், எண்டத்தூர் வழியாக மேல்மருவத்தூருக்கும் அரசு பேருந்துகளை இயக்கவேண்டும். அதுபோல் அந்த மக்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து, காஞ்சிபுரம்-திருவண்ணாமலைக்கும் இந்தப் பேருந்துகளை இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்தப் பகுதிகளுக்குப் பேருந்துகள் வேண்டுமென்ற கடிதத்தை கையிலே வைத்திருக்கிறார்கள்? அதை ஒரு மனுவாக எழுதித் தருவார்களேயானால், அதிகாரிகளை ஆய்வு செய்யச் சொல்லி எங்கே உடனடியாகத் தேவையோ, எங்கே மக்களுடைய அடர்வு அதிகமாக இருக்குமோ அந்தப் பகுதிகளிலே பேருந்துகளை இயக்கலாம். 29 ஆம் தேதி நடைபெறவிருக்கும் போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையின் பதிலுரையில் மேலும் இதைப்பற்றி அதிகமான விவரங்கள் இருக்கின்றன. அதில் அவருக்கு எந்தெந்த வழித்தடங்களிலே பேருந்துகள் இயக்கப்படும் என்பதை விவரமாக அறிவிக்கிறோம்.

முற்பகல் 9-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 64, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராஜேந்திரன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

64—

கால்நடை மருத்துவமனை

***70090—திரு. சபா. இராஜேந்திரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—